OS.No. 232/2022

Date : 26.11.2025

Witness Name & Rank – ராமசாமி - PW2

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் 2017 ஆம் ஆண்டு உடல்நிலை சரியில்லை என எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லி உள்ள நிலையில் அது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த சொத்துக்கள் அனைத்தும் எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது மனைவி 1 ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்பதாக சொல்லி 7/3/2017 ஆம் தேதி கிரைய ஒப்பந்தம் செய்தார் என்றால் இல்லை. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் படி கிரைய தொகை ரூபாய் 5 லட்சம் பேசப்பட்டு முன் தொகையாக எனது மனைவி ஒரு லட்சம் பெற்றுக் கொண்டார் என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்திற்கு பிறகு 22 11 2017 ஆம் தேதி எனது மனைவி மீதக் கிரைய தொகையை பெற்றுக் கொண்டு தாமாக முன்வந்து பிரதிவாதி பேருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை.
2. எனவே நான் எனது பிரமாண வாக்குமூலத்தின் கடனுக்காக ஆவணங்கள் எழுதப்பட்டதாக சொல்லி உள்ளது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல கிரயம் செல்ல தக்கது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்து ரூபாய் 50 லட்சத்திற்கு விற்பனை ஆகிறது என நான் சொல்லியுள்ள நிலையில் அதை எடுத்துக்காட்ட எந்த விதமான அரசு வழிகாட்டு மதிப்பு சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது மனைவிக்கும் பிரதிவாதிகளின் தந்தைக்கும் எவ்வித கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவிக்காக தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் எனது மனைவியின் கணவர் என்ற அடிப்படையில் ஆவணங்களை பரிசீலிக்காமல் அவர் ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது**

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,

**சார்பு நீதிபதி, பல்லடம்.**